# இயேசுவுடன்

## ஒரு மணி நேரம்





**இலங்கை
தேசத்திற்காக
ஜெபிக்க...**

1 *Hour with Jesus*

**...ஒரு மணி நேரமாவது என்னோடேகூட
விழித்திருக்கக்கூடாதா?**
**மத்தேயு 26:40.**

# உங்கள் சகோதரனிடமிருந்து...



**பிரியமானவர்களே,**

இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில், உங்களுக்கு என் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

இலங்கை தேசத்தை அதிகமாக கர்த்தர் நேசிக்கிறார். இங்கிருந்து ஒரு மாபெரும் எழுப்புதல் புறப்பட வேண்டுமென்பது, தேவத் திட்டம். அதற்காகவே கடந்த காலங்களில் நம்மை அதிகமாக ஜெபிக்க வைத்தார். கொழும்பு, கண்டி, கிளிநொச்சி, திருகோணமலை வவுனியா, காலி, மட்டகளப்பு போன்ற இடங்களில் மூன்று நாட்கள் உபவாச ஜெபங்கள் ஏற்படுத்தி, திறப்பிலே நின்று ஜெபிக்க வைத்தார். 2008ம் ஆண்டு, 21 நாட்கள் தேசமெங்கும் ஜெப யாத்திரை செய்து, தேசத்தின் சமாதானத்திற்காக ஜெபிக்க வைத்தார்.

நாம் ஏறெடுத்த எல்லா ஜெபங்களும், தேவனின் தூப கலசத்தை நிரப்பிக் கொண்டிருக்கிறது. நாம் வடித்த கண்ணீர், அவருடைய துருத்தியில் சேர்க்கப்பட்டு வருகிறது. இப்பொழுது எழுப்புதலுக்காக கர்த்தர் முன்குறித்த வேளை வந்திருக்கிறது. எனவே நமது ஜெபத்தை தீவிரப்படுத்த வேண்டும்.

இதற்காக அழைப்பு கொடுத்தபோது, தேசத்திற்காக தினந்தோறும் ஜெபிக்க, நீங்கள் தீர்மானித்தீர்கள், ஜெபித்து வருகிறீர்கள். நீங்கள் கருத்தாக ஜெபிப்பதற்கு வசதியாக, இந்த ஜெபக் கையேடை தயாரித்து, உங்கள் கரங்களில் கிடைக்கப் பண்ணியிருக்கிறோம். அனுதினமும் இதை வைத்து கருத்தாக ஜெபியுங்கள். தனி ஜெபத்தில், குழு ஜெபத்தில் ஜெபியுங்கள். மிகச் சீக்கிரத்தில் இலங்கை தேசத்தில் எழுப்புதலைக் காண்போம்.

எனக்காக, 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியங்களுக்காக ஜெபித்து கொள்ளுங்கள். தேவ கிருபை உங்களோடிருப்பதாக!

உங்கள் சகோதரன்,

(மோகன் சி. லாசரஸ்)

# ஒரு மணி நேரம்



# ஜெபிப்பது எப்படி?

## 15 நிமிடங்கள்

**துதித்து, ஸ்தோத்தரித்து ஜெபியுங்கள்.**

| | | |
|---|---|---|
| **பிதாவாகிய தேவன்** | - | கர்த்தருடைய நாமங்கள், அவர் செய்த அதிசயங்களைச் சொல்லி, கர்த்தரைத் துதியுங்கள். |
| **குமாரனாகிய கிறிஸ்து** | - | இயேசுவின் நாமங்கள், அவர் செய்த அற்புதங்களைச் சொல்லி, இயேசுவைத் துதியுங்கள். |
| **பரிசுத்த ஆவியானவர்** | - | ஆவியானவரின் நாமங்கள், அவருடைய கிரியைகளைச் சொல்லி, ஆவியானவரைத் துதியுங்கள். |

## 15 நிமிடங்கள்

**வேதத்தை தியானியுங்கள்.**

வேதத்தை முழங்காலில் நின்று வாசித்து, தியானித்து, வசனத்தை வைத்து ஜெபியுங்கள். முடிந்தால், தினமும் ஒரு வேத வசனத்தை மனப்பாடம் செய்து கொள்ளுங்கள்.

## 30 நிமிடங்கள்

**குறிப்புகளுக்காக ஜெபியுங்கள்.**

10 நிமிடங்கள் – **உங்கள் சபைக்காக, மாகாணத்திற்காக, மாவட்டத்திற்காக,**

10 நிமிடங்கள் – **இந்த புத்தகத்திலுள்ள சில குறிப்புகளுக்காக,**

10 நிமிடங்கள் – **உங்கள் குடும்பத்திற்காக,**
**தனிப்பட்ட தேவைகளுக்காக ஜெபியுங்கள்.**

# இலங்கை தேசம் சில புள்ளி விபரங்கள்:

## மொத்த மக்கள் தொகை சுமார் 2 கோடியே 20 லட்சம்.

| | |
|---|---|
| சிங்களர்கள் | 74.9% |
| தமிழர்கள் | 15.4% |
| இஸ்லாமியர்கள் | 9.2% |
| மற்றவர்கள் (பறங்கியர், வேடர்கள்) | 0.5% |

## பிரதான மதங்கள்

| | |
|---|---|
| பௌத்தம் | 70.2% |
| இந்து சமயம் | 12.6% |
| இஸ்லாம் | 9.7% |
| கிறிஸ்தவர்கள் | 7.5% |

(கத்தோலிக்கர்கள் 6.1% மற்ற கிறிஸ்தவர்கள் 1.4%)

| | |
|---|---|
| மாகாணங்கள் | 9 |
| மாவட்டங்கள் | 25 |

| | |
|---|---|
| பிரதேச செயலக பிரிவுகள் | 341 |
| கிராம சேவகர் பிரிவுகள் | 14,021 |
| கிராமங்கள் | 33,400 |



| எண் | மாகாணம் | மாவட்டங்கள் |
|---|---|---|
| 1. | வடமாகாணம் | யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார், வவுனியா. |
| 2. | கிழக்கு மாகாணம் | திருகோணமலை, மட்டகளப்பு, அம்பாறை. |
| 3. | வடமேற்கு மாகாணம் | புத்தளம், குருநாகல். |
| 4. | வட மத்திய மாகாணம் | அனுராதபுரம், பொலநறுவ |
| 5. | மேற்கு மாகாணம் | கம்பஹா, கொழும்பு, களுத்துறை. |
| 6. | மத்திய மாகாணம் | மாத்தளை, கண்டி, நுவரெலியா. |
| 7. | ஊவா மாகாணம் | பதுளை,மொனறாகலை. |
| 8. | சபர கமுவ மாகாணம் | இரத்தினபுரி, கேகாலை |
| 9. | தெற்கு மாகாணம் | காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை. |

# தேவனைத் துதியுங்கள்!



1. இலங்கை தேசத்தை கர்த்தர் நேசிக்கிறதற்காக, அவருடைய இரத்தம் இந்த தேச மக்களுக்காகவும் சிந்தப்பட்டபடியால், தேவனைத் துதிப்போம்.

2. அப்போஸ்தலனாகிய தோமாவை கர்த்தர் அனுப்பியதற்காக, இன்னும் ஏராளமான மிஷனெரிகளை கோதுமை மணிகளாக அனுப்பி, சுவிசேஷத்தை அறியச் செய்தபடியால் அவரை ஸ்தோதரிப்போம்.

3. இந்த தேசத்தில் தேவன் எழுப்பியிருக்கிற சபைகளுக்காக, மேய்ப்பர்கள், சுவிசேஷகர்களுக்காக அவரை ஸ்தோத்தரிப்போம்.

4. தேசத்தில் அமைதியை கட்டளையிட்டதற்காக, சுவிசேஷம் அறிவிக்க திறந்த வாசலை கர்த்தர் ஏற்படுத்தியதற்காக அவரைத் துதிப்போம்.

5. சிதறுண்ட இலங்கை மக்கள் பல தேசங்களின் எழுப்புதலுக்கு காரணமாக இருக்கிறபடியால் தேவனைத் துதிப்போம்.

6. திருச்சபை மக்கள் மத்தியில் ஜெப ஆவியும், ஆத்தும பாரமும் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், நடைபெறுகிற ஊழியங்கள் மூலம் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு வருகிறபடியால், பலத்த அற்புத அடையாளங்கள் நடைபெறுகிறபடியால் தேவனைத் துதிப்போம்.

7. நாம் ஜெபிக்க, ஜெபிக்க தேசத்தில் ஆசீர்வாதமான மாற்றங்கள் வருகிறபடியால், புதிய தொழிற்சாலை வசதிகள், சாலை வசதிகள், வீடமைப்புத் திட்டங்கள், விவசாய அபிவிருத்தி திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டபடியால் தேவனைத் ஸ்தோத்தரிப்போம்.



# எழுப்புதலுக்காக ஜெபியுங்கள்!

1. ஒரு எழுப்புதல் தீ இந்த தேசத்திற்குள் வரும், அது தமிழர்கள் மத்தியில் பரவும் என்று, கர்த்தர் வாக்குப் பண்ணியிருக்கிறார். தேவன் வாக்குப் பண்ணியிருக்கிற எழுப்புதல் அக்கினி, பின்மாரி மழை ஊற்றப்பட ஜெபியுங்கள்.

2. எழுப்புதலுக்கு முன் சபைகள் பரிசுத்தமாக்கப்பட வேண்டும், பிரிவினைகள் நீக்கப்பட வேண்டும், ஊழியர்களுக்குள்ளே பரிசுத்தம் உண்டாக வேண்டும். கர்த்தர் ஒரு பெரிய சுத்திகரிப்பை, சபைகளில், ஊழியர்கள் மத்தியில் உண்டாக்க ஜெபியுங்கள்.



3. கர்த்தருக்காக சாதிக்கிற அநேக ஊழியர்கள் எழும்ப போகிறார்கள். உலகத்தை கலக்குகிறவர்கள் எழும்பப் போகிறார்கள். அற்புத, அடையாளங்களை நிறைவேற்றுகிறவர்கள் எழும்பப் போகிறார்கள். மரித்தவர்களையும் எழுப்பக் கூடிய வல்லமையுள்ள ஊழியர்கள் எழும்புவார்கள் என்று கர்த்தர் வாக்குப் பண்ணியிருக்கிறார். இந்த வாக்குத்தத்தம் நிறைவேற ஜெபியுங்கள்.

4. ஒரு திரளான வாலிப சேனை எழும்பப் போகிறது. அதிலே ஆண்கள் இருக்கிறார்கள், பெண்கள் இருக்கிறார்கள், அவர்கள் கறைதிறையற்றவர்கள், பட்டயம் உருவுகிறவர்கள். சாத்தானின் சேனையை சங்கரித்து, கர்த்தருக்காக பராக்கிரமமான கிரியைகளை செய்வார்கள். இந்த தீர்க்கதரிசனம் நிறைவேற ஜெபியுங்கள்.

5. திரளான சபைகள் எழும்பப் போகிறது. அது ஜனங்களினால் நிரம்பப் போகிறது. அதில் கர்த்தரின் மகிமை வாசமாய் இருக்கும். யார் போனலும் அதைப் பார்க்கலாம். அங்கு எவரும் கர்த்தரை தரிசிப்பார்கள். இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நிறைவேற ஜெபியுங்கள்.

6. எல்லா சபைகளிலும் திரளான ஜெபிக்கிற மக்கள், கண்ணீர் வடிக்கிற மக்கள் எழும்ப வேண்டும். மன்றாட்டின் ஆவி சபைகளில் எல்லோர் மேலும் ஊற்றப்பட ஜெபியுங்கள்.

# போராடி யுத்தம் பண்ணுங்கள்!

**(அந்தகார ஆவிகளோடு)**

1. இலங்கையின் பலவானை இயேசுவின் நாமத்தில் முந்திக் கட்டுங்கள். வான மண்டல பொல்லாத ஆவிகளின் சேனைகளை துரத்துங்கள்.

2. இந்த தேசத்தில் திரளாய் கிரியை செய்கிற வலுசர்ப்பத்தின் ஆவிகளை வெட்டி வீழ்த்துங்கள். பெரும்பான்மையான மக்களை வஞ்சிக்கிற இந்த வஞ்சக ஆவி, இந்த தேசத்தில் கிரியை செய்யவே கூடாது. துரத்துங்கள் இயேசுவின் நாமத்தில்.

3. விக்கிரக ஆவிகள், சிலை வணக்கத்தை தூண்டுகிற ஆவிகள் அழிக்கப்படனும், அதன் பலிபீடங்கள் நிர்மூலமாகனும், தமிழ் மக்களை பயமுறுத்துகிற, ஏமாற்றுகிற, அடிமைப்படுத்துகிற இந்த ஆவிகளின் கிரியைகளை அழியுங்கள்.

4. மந்திர, பில்லி சூனிய ஏவல் பிசாசின் வல்லமைகள் அழிக்கப்பட வேண்டும். குறி சொல்கிற ஆவிகள் அழிக்கப்படனும்.

5. மாம்சத்தில் வந்த இயேசுவை மறுதலிக்கப்பண்ணும் அந்திக்கிறிஸ்துவின் ஆவிகள், கள்ள உபதேசத்தை தூண்டுகிற ஆவிகள் அழிக்கப்படனும்.

6. தீவிரவாதங்களை தூண்டி, இரத்தம் குடிக்கத் துடிக்கிற பொல்லாத ஆவிகள், வன்முறைகள், விபத்துகள், கொலை வெறிகளை தூண்டுகிற ஆவிகள் அழிக்கப்பட வேண்டும்.



7. விபச்சாரம், வேசித்தனம், இச்சகைள், ஓரினச் சேர்க்கைகள், குடிவெறி, போதை வஸ்துக்களை தூண்டுகிற ஆவிகள், சிறுவர்கள், வாலிபர்கள் நடுவில் ஆபாசங்களை தூண்டுகிற ஆவிகள் அழிக்கப்பட போராடி ஜெபியுங்கள்.

# மன்றாடி ஜெபியுங்கள்!

**(தேச மக்கள் இரட்சிக்கப்பட்டு, ஜீவனுள்ள தேவனை அறிய மன்றாடுங்கள்)**



1. சுமார் ஒன்றரை கோடிக்கும் அதிகமாக வாழ்கிற சிங்கள மக்கள் இரட்சிக்கப்பட வேண்டும். அவர்களடைய மனக்கண்கள் திறக்கப்பட வேண்டும். கர்த்தர் அவர்களுக்கு தம்மை வெளிப்படுத்த வேண்டும். பாரத்தோடு ஜெபியுங்கள்.

2. சுமார் 33 லட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் இரட்சிக்கப்படும்படியாக, கர்த்தரே தேவனென்று அவர்கள் அறிந்து கொள்ளும்படியாக, விக்கிரக வழிபாட்டிலிருந்து விடுதலை பெறும்படியாக மன்றாடுங்கள்.

3. இருபது லட்சத்திற்கும் அதிகமான இஸ்லாமிய மக்கள் மற்றும், பிற இன மக்கள் இரட்சிக்கப்படும்படியாக, ஒருவர் கூட நரக அக்கினிக்குள் போய்விடக் கூடாது. பாரத்தோடு ஜெபியுங்கள்.

4. உலகமெங்கிலும் சிதறியிருக்கிற இலங்கை தமிழர்கள் மற்றும், சிங்கள மக்கள் இரட்சிக்கப்பட, பாரம்பரிய கட்டுகளிலிருந்து விடுதலைப் பெற பாரத்தோடு ஜெபியுங்கள்.

5. தேசத்தை ஆளுகிறவர்கள், உயர் அதிகாரிகள், பெரிய தொழிலதிபர்கள், சமுதாயத்தில் பிரபலமானவர்கள் இரட்சிக்கப்பட்டு, பகிரங்கமாக கர்த்தரே தேவனென்று அறிக்கை செய்ய ஜெபியுங்கள்.

6. இயற்கையினால் அழிவுகள் வராமலிருக்க, வெள்ளங்கள், நிலச்சரிவுகள், சுனாமி, கொள்ளை நோய்கள், பேராபத்துகள் ஏற்பட்டு, ஜனங்கள் அழியக் கூடாது. மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும், இரட்சிக்கப்பட வேண்டும். அதற்காக மன்றாடுங்கள்.

# தீர்க்கதரிசனங்கள் நிறைவேற ஜெபியுங்கள்!

1. இலங்கை தேசத்தின் மேல் கர்த்தர் பெரிய ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார். இழந்ததை ஏழும் எழுபதுமாக திரும்ப பெறுவீர்கள். ஆசியாவிலேயே சிறந்த வணிக தேசமாக மாறும், துறைமுகம் மூலம் அனேக ஆசீர்வாதங்கள் வரப் போகிறது. – இந்த தீர்க்கதரிசினம் நிறைவேற ஜெபியுங்கள்.



2. பல புதிய நன்மைகள் வரப் போகிறது. மண்ணிற்கு கீழ் உள்ள அநேக ஆசீர்வாதங்கள் வெளிப்படப் போகிறது. இந்த தேசத்தின் விவசாயம் ஆசீர்வதிக்கப்படும். நூறு மடங்கு பலன் பெறுவீர்கள். தேசத்தின் தண்ணீர் ஆசீர்வதிக்கப்படும், விவசாயத்தில் புதிய முறைகள் தோன்றும். – இந்த தீர்க்கதரிசனம் நிறைவேற ஜெபியுங்கள்.



3. வெளிநாட்டு நிறுவனங்கள் மூலம் புதிய தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கப்படும். அநேக தேசங்கள் உங்களைத் தேடி வருவார்கள். இதோ இந்த தேசத்தை உயர்த்தும்படி, கர்த்தர் உலகத்தின் பலவான்களை சைகை காட்டி அழைப்பாபர். இந்த தேசத்தில் முதலீடு செய்வார்கள். இந்த தேசம் செழிக்கும். எனவே பாதிக்கப்பட்ட மற்ற தேசங்களுக்கு இலவசமாய் உதவி செய்வீர்கள். – இந்த தீர்க்கதரிசனம் நிறைவேற ஜெபியுங்கள்.

4. கடல் வளம் பெருகும், வலை கிழியத்தக்க மீன்கள், முத்துக்கள் வரும், மலைகளின் கீழே அனேக புதையல்கள், இரத்தினங்கள், துத்தநாகம் கிடைக்கும். காடுகள் மூலம்

ஆசீர்வாதம் உண்டாகும். ஆசீர்வாதமான மழை பெய்யும். ஏழை-எளியவர்களுக்கு வீடு, வாசல் உண்டாகும். - இந்த தீர்க்கதரிசினம் நிறைவேற ஜெபியுங்கள்.

5. தேசத்தின் பொருளாதாரம் உயர்த்தப்படப் போகிறது. உலக அரங்கிலே இந்த தேசத்திற்கு அங்கிகாரம் வழங்கப்படும். பல தேசங்களுக்கு ஆசீர்வாதமாக மாறும். சாலை வசதிகள் பெருகும், நூதன விஞ்ஞானிகள், ஞானவான்கள் எழும்புவார்க்ள். அநேகர் கல்வி கற்க இந்த தேசத்திற்கு வருவார்கள். பல தேசங்களுக்கு சென்றவர்கள் திரும்பி வருவார்கள். - இந்த தீர்க்கதரிசினம் நிறைவேற ஜெபியுங்கள்.




இலங்கையில் இயேசு விடுவிக்கிறார்

கெத்செமனே ஜெப மையம்

மற்றும்

கிளை அலுவலகங்கள்!

**வத்தளையில்**

*57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA. (Ph: 011 293 0152)*

**கிளிநொச்சியில்**

இல. 31, உதயநகர் கிழக்கு, நாகதம்பிரான் கோவில் வீதி, கிளிநொச்சி. (Ph: 021 - 2285 284).

- சிக்கலான சூழ்நிலைக்கு சிறந்த ஆலோசனைகள்!
- பிரச்சனைகளுக்கு விசேஷித்த பிரார்த்தனைகள்!
- 'இயேசு விடுவிக்கிறார்' அனைத்து வெளியீடுகளும் கிடைக்கும்!

# இயேசுவே, இலங்கையை ஆசீர்வதியும்!




**மக்கள் தொகை:**
**சுமார் 2 கோடியே 20 லட்சம்.**
**மாகாணங்கள் : 9**
**மாவட்டங்கள் : 25**
**கிராமங்கள்: 33,400**

## ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!

எங்கள் முகவரி:
Jesus Redeems Ministries
Nalumavadi-628 211
Thoothukudi Dt., India.
Tel:+91-4639-235 305
Email: info@jesusredeems.com
Website: www.jesusredeems.com